<u>கம்பம் நகராட்சி</u>

**2019–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (31.01.2019) ஆம் நாள் வியாழன் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

<u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 1/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் பதிவுசெய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 1/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் பதிவுசெய்யலாம். |
| **3.** | இந்நகராட்சி சொந்தமான குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் டி.சி.யு. **9465** மற்றும் டிரெய்லர் டி.சி.யு. **9769** வாகனத்திற்கான காப்பீடு காலம் **16.11.2018**ம் தேதியுடன் முடிவடைந்துள்ள நிலையில், தொடர்ந்து, மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகனத்தை காப்பீடு செய்ய அனுமதியும், அதற்கான தொகை ரூ. **18,690/–**ஐ (ரூபாய் பதினெட்டாயிரத்து ஆறுநூற்று தொன்னூறு மட்டும்) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>**1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். |
| **4.** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். டி.என். **60** X **0499** வாகனத்திற்கு காப்பீடு காலம் **10.02.2019** தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பம் மூலம் வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.**10,503/–**ஐ (ரூபாய் பத்து ஆயிரத்து ஐநூற்று மூன்று மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 336/2018//இ1)** |
| **5.** | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறைக்கான உரிமத்திற்கு **30**.01.2019ம் நாள் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2017–18 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1) | ச. அம்சுக்கொடி கம்பம் **(ஒப்பந்தப்புள்ளி)** | 107000/– | 106943/– | – | **157** | **கூடுதல்** |
| | | | – | 101931/– | **5069** | **கூடுதல்** |
| 2) | பி.கே. திருப்பதி கம்பம் **(ஒப்பந்தப்புள்ளி)** | 50000/– | 106943/– | – | 56943 | குறைவு |
| | | | – | 101931/– | 51931 | குறைவு |
| 3) | எ. இளையராஜா கூடலூர் **(ஒப்பந்தப்புள்ளி)** | 48000/– | 106943/– | – | 58943 | குறைவு |
| | | | – | 101931/– | 53931 | குறைவு |

**அலுவலகக்குறிப்பு:-**

புதிய பேருந்து நிலையத்தில் பொருள் பாதுகாப்பு அறைக்கான உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி இதுவரைத் தொடர்ந்து **20.02.2018, 14.03.2018, 27.03.2018, 25.04.2018, 04.05.2018, 13.06.2018, 23.08.2018, 26.09.2018, 11.10.2018, 27.11.2018, மற்றும் 27.12.2019** ஆகிய தேதிகளில் **11 முறை** பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் முன்பணம் செலுத்தி யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. 12 வது முறையாக கோரியதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் கடந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையினை விட கூடுதலாக கோரியுள்ள திருமதி. ச. அம்சுக்கொடி, கம்பம் அவர்கள் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 3207/2017/பி2)

**6.** இந்நகராட்சிக்கு அலுவலக பணி மற்றும் சொத்துவரி பொதுச் சீராய்வுக்கான கணக்கீட்டுத்தாள், சிறப்பு அறிவிப்புகள் மற்றும் இதர பதிவேடுகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 Y 1959 வாகனத்திற்கு 26.02.2019 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,30,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு..

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்யவும், நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரேத எரியூட்டு கட்டணம் (ஒன்றுக்கு) ரூ.2700/– ல் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 700/– ஆக நிர்ணயம் செய்து மேற்படி நகராட்சி நவீன எரியூட்டு மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை அரசு ஆணை வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டும் இராமநாதபுரம் ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்திட இந்நகர் மன்ற தீர்மான எண். 1492, நாள். 27.04.2018–ல் அனுமதியளிக்கப்பட்டு, நவீன எரிவாயு தகன மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்து வந்த நிலையில் மேற்படி தொண்டு நிறுவனம் நகராட்சி விதிமுறைகளுக்கு முரணாகவும், மின் கட்டணம் செலுத்தாமல் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாகவும், முறையாக பிரேத எரியூட்டு கட்டணத்தை செலுத்தாமலும், உரிய முகாந்திரம் பலமுறை கோரியும் காரண விளக்கம் ஏதும் தெரிவிக்காத நிலையில் செயல்பட்டதாலும் 31.01.2019 முதல் நகராட்சி நவீன எரிவாயு தகன மேடையின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து உத்திரவிடப்பட்டது.<br>கம்பம், கே.எம்.பி. லெட்சுமணன் சாரிடபுள் டிரஸ்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் தற்போது தொண்டு நிறுவனத்தின் மூலம் நகராட்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்ய விருப்பம் தெரிவித்து தங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.<br>தற்போது இராமநாதபுரம் ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனத்தின் இயகுதல் மற்றும் பராமரிப்புக்கான உத்திரவினை ரத்து செய்துள்ளபடியால், தொடர்ந்து நகராட்சி நவீன எரியூட்டு மையம் தொய்வில்லாமல் செயல்படுவதற்கு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை அரசு ஆணை வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு கம்பம், கே.எம்.பி. லெட்சுமணன் சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – 1) இராமநாதபுரம் ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்வதை ரத்து செய்து உத்திரவிட்டதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) நகராட்சி நவீன எரிவாயு தகன மேடையின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளவும், நகராட்சியால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட எரியூட்டு கட்டணம் ரூ. 2,700/–ல் ரூ. 700/–ஐ சேவை கட்டணமாக நகராட்சிக்கு செலுத்திடவும், கம்பம், கே.எம்.பி. லெட்சுமணன் சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.382/2018/இ1) |
| 9. | இந்நகராட்சி கணினி வசூல் பணிக்காக, நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து தனியார் மெய்நிகர் வலையமைப்பு (Virtual Private Network ) வழங்கப்பட்டுள்ளது. அனைத்து நகராட்சிகளிலும் சொத்துவரி மறு நிர்ணயம் ( Revision) கணக்கீட்டுத்தாள் (Working Sheet) பதிவேற்றப்பணிகள் https: tnurbanseva.tn.gov.in என்ற வலைதள முகவரியில் நடைபெறுவதால், சேவையின் அணுக்க நேரம் (Access time) அதிகமாக இருக்கின்றது. இந்த அணுக்க நேரத்தை குறைப்பதற்கு கம்பிவட ஒளிக்கற்றை (Optical Fibre Cable) இணைப்பு உதவுவதால் பி.எஸ்.என்.எல் நிறுவனம் மற்றும் பி.எஸ்.என்.எல் நிறுவனம் மூலம் இணைப்பை பெற அனுமதி வேண்டியும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 10,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1335/2018/இ1) |

**10.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கலந்துரையாடல் கூட்ட அறிவுரைகளின்படி ஒவ்வொரு நகராட்சியிலும் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் வருகை பதிவேடு கைரேகை வருகை பதிவு (Bio Metric) முறையில் அமுல்படுத்த கோரியதன்படி கம்பம் நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவு – 1 எண்ணம், மற்றும் சுகாதார பிரிவிற்கு – 3 எண்ணம் சேர்த்து நான்கு எண்ணம் Bio Metric Attendance & Access Control வாங்கி பொருத்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–க்குள் பணிகள் மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி பெறப்பட்ட உள்ளூர் மாவட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு மற்றும் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | RAJAGANAPATHI SCALES,<br>1B, KALIAMMAN KOVIL STREET,<br>PERIYAKULAM ROAD, THENI- 625531 | ரூ. 51,873/– |
| 2. | MASTER SAFETY<br>1114/D, VIRUTHUNAGAR PETTAI KOVIL OPP,<br>PERIYALULAM ROAD, THENI. | ரூ. 49,206/– |
| 3. | MARS WEIGHING SYSTEM & SERVICE,<br>19, BC, KADARKARAI NADAR STREET,<br>PERIYALULAM ROAD, THENI. | ரூ. 53,596/– |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள MASTER SAFETY, 1114/D, VIRUTHUNAGAR PETTAI KOVIL OPP, PERIYALULAM ROAD, THENI விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**11.** தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் இந்நகராட்சிக்கு தேவையான இரண்டாம் நிலை குப்பை சேகரம் செய்ய இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) விநியோகம் செய்யவும், உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றுவதற்கும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவுகளில் நிர்வாக அனுமதி வழங்கிய மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண். 4773/ஒப்பந்தபுள்ளி/2018, நாள். 21.11.2018 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.1,12,613/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து பனிரெண்டாயிரத்து ஆறுநூற்று பதிமூன்று மட்டும் ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1)

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.01. 2019**
**இடம். கம்பம்**